*1*

# தேவன் விரும்புகின்ற வகையிலான குடும்பம்

***வேதபாடப் பகுதி:*** *எபேசியர் 5:21-6:4.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு பிரசங்க முகாமில் ''குடும்ப உறவுமுறைகளைப் பக்குவப்படுத்துதல்'' என்ற தலைப்பில் பேசும்படி என்னிடம் கேட்கப்பட்டது. தலைப்புத் தேர்வுசெய்தலைப் பற்றி நான் பாராட்டினேன். பக்குவமடைதல் என்பதன் கருத்தை நான் விரும்பினேன்: நாம் யாவரும், "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளர" வேண்டியிருக்கிறது (எபேசியர் 4:15ஆ). உறவுமுறைகளின்மீது வலியுறுத்தம் என்பது நல்லது என்று நான் நினைத்தேன்: நாம் யாவரும் பிறமக்கள் தேவைப்படும் நிலையில் இருக்கின்றோம் (ஆதியாகமம் 2:18), மற்றும் நாம், பிறருடன் ஒத்திசைதல் எவ்வாறு என்று கற்றுக்கொள்ளுதல் அவசிய மாக உள்ளது. குடும்பம் என்ற தலைப்பின்மீதும் நான் பிரியப்பட்டேன்; பொதுவாக இல்லம் மற்றும் குறிப்பாக எனது சொந்தக் குடும்பம் என்பதைக்காட்டிலும் அதிகமான மதிப்புமிக்க விஷயம் வேறெதுவும் எனக்கு இருப்பதில்லை.*

*இருப்பினும் இந்தத் தலைப்பானது என்னை மூழ்கடிக்கச் செய்தது என்பதை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும்: குடும்ப உறவுகளில் பக்குவம் பற்றி நான் எவ்வாறு பிரசங்கிக்க முடியும்? நான் இல்லத்தில் இருந்து தொலைவில் இருந்திருந்தால், ''குடும்ப உறவுகளில் பக்குவமடைதல் - மற்றும் நான் அதை எவ்வாறு அடைந்தேன்'' என்பது பற்றிப் பிரசங்கித்திருக்கலாம். இருப்பினும், எனது உரையைக் கேட்பவர்களில் சிலர் என்னை அறிந்திருப்பார்கள், மற்றும் நான் அதை விட்டு ஒருக்காலும் தப்பிக்க இயலாது என்று அறிந்தேன்!*

*கணவன் மனைவி ஆகியோரின் உறவை கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையில் உள்ள உறவுடன் பவுல் ஒப்பிடும் இடமாகிய எபேசியர் 5ன் பிற்பகுதியை நான் நினைவுகூருவதற்கு முன்வரையில் உண்மையில் நான் செயல்பட இயலாதிருந்தேன். இயேசுவின் நாமம் பக்குவம் என்ற சொல்லுக்கு ஒத்ததாக உள்ளது. கிறிஸ்துவுக்கு, அவரது ஆவிக்குரிய சரீர மாகிய சபையுடன் உள்ள உறவைக் காண்பதினால் நாம், பக்குவமான உறவுமுறை என்றால் என்ன என்பது பற்றிய ஒரு அடிப்படைக் கருத்தைப் பெற முடியும். இவ்விதமாக, எபேசியர் 5ன் பிற்பகுதியும் எபேசியர் 6ன் முற்பகுதியும், அந்த எடுத்துரைப்பிற்கு நான் தேர்ந்துகொண்ட*

வேதவசனப்பகுதியாயிற்று - இது நான் மிகவும் மகிழ்வுடன் அனுபவித்ததும், நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் காணப்பட்டதுமான பாடமாயிற்று.

இந்த விசேஷித்த பாடத்தொடரை எவ்வாறு தொடங்குவது என்று நான் ஆழ்ந்து சிந்திக்கையில், என் சிந்தையானது மீண்டும் எபேசியர் 5க்குத் திரும்பிற்று. திருமணம் மற்றும் குடும்பம் என்பது பற்றிய பாடத்தொடரை எந்த வசனப்பகுதியானது மிகச்சிறப்பாக அறிமுகப்படுத்தக்கூடும்? இந்த முதல் எடுத்துரைப்பில் நான், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் குறிப்புரைகளை உள்ளடக்க விரும்புவதால், நாம் எபேசியர் 5:21ல் தொடங்கி 6:4வரை தொடர்ந்து படிப்போம்:

> தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.
>
> மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.
>
> பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற

*சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.*

*இவ்வசனப்பகுதியின் வளமிக்க சத்தியங்கள் யாவற்றையும் நாம் எடுத்துரைக்கத் தொடங்க இயலாது இருக்கையில், "தேவன் விரும்புகின்ற வகையிலான குடும்பத்தைப்'' பற்றி நாம் கலந்துரையாடுகையில் அவற்றில் பலவற்றைத் தொடுவோம். தேவன் விரும்புகின்ற வகையிலான குடும்பத்தின் பண்புநலன்கள் யாவை?*

## *சுயநலமின்மை (5:21)*

*22ம் வசனத்திற்குப் பதிலாக 21ம் வசனத்தில் இருந்து நமது வேதபாடப்பகுதி தொடங்கியது பற்றி நீங்கள் திகைப்படைந்திருக்கலாம். நாம் (விசேஷமாக நம்மில் கணவர்களாய் இருப்பவர்கள்) 22ம் வசனத்தில் இருந்து தொடங்கவே விரும்புவோம்: ''மனைவிகளே, கர்த்தருக்கு கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.'' இருப்பினும், தொடர்ந்து வரும் வசனங்களில் உள்ள உறவுமுறைகளுக்குப் பின்னணியானது 21ம் வசனத்தில் காணப்படுகிறது: "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.'' நம்மில் ஒவ்வொருவரும் நம்மீது காண்பிப்பதைவிட அதிகமான அக்கறையை நமது குடும்பங்களில் உள்ளவர்கள்மீது காண்பிக்க வேண்டும்.*

*நீங்கள், 21ம் வசனம் நமது வேதபாடப்பகுதியின் அங்கமாய் இருக்க வேண்டும் என்பதில் இணக்கம் அற்றவராயிருந்தால், பின்வருவது பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: மூலவேதப்புத்தகத்தில், 22ம் வசனத்தில் வினைச்சொல் இல்லை; இதற்கான வினைச்சொல், 21ம் வசனத்தில் இருந்தே தரப்பட வேண்டியுள்ளது. 22ம் வசனத்தில் "கீழ்ப்படியுங்கள்" என்ற வார்த்தையின் அர்த்தம் எதுவாயிருப்பினும், அது 21ம் வசனத்தில் கூறப்பட்ட (கணவர்கள் உட்பட) எல்லாக் கிறிஸ்தவர்களையும் முதலில் இணைவிப்பதாக உள்ளது.*

*புதிய ஏற்பாடு முழுவதிலும், பரஸ்பரம் கீழ்ப்படிதல் பற்றிப் போதிக்கப்பட்டுள்ளது:*

> *... அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள் (கலாத்தியர் 5:13).*
>
> *ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ... (கலாத்தியர் 6:2அ).*
>
> *ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக (பிலிப்பியர் 2:3, 4).*
>
> *... கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் (ரோமர் 12:10ஆ).*

நமது பரிபூரணமான உதாரணமாகிய கிறிஸ்துவானவர், "ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் ..." வந்தார் (மத்தேயு 20:28).

நமது வேதபாடப்பகுதியில் "அன்பு" என்பது ஐந்து முறை குறிப்பிடப்பட்டுள்ளது, மற்றும் அந்த ஒவ்வொருமுறையும் அவ்வார்த்தையானது *agape* என்ற வார்த்தையின் ஏதாவதொரு வடிவத்தினுடைய மொழிபெயர்ப்பாகவே உள்ளது. 1 கொரிந்தியர் 13:5ல் பேசப்பட்டுள்ள இந்த அன்பு, "தற்பொழிவை நாடாது."

நமது வேதபாடப்பகுதியில் பேசப்பட்டுள்ள உறவுமுறைகள் பற்றித் தகுதிவாய்ந்த கண்ணோக்கைப் பெறுவதற்கு, நாம் நமது சிந்தையில், பரஸ்பரம் கீழ்ப்படிதலின் கொள்கையைக் காத்துக்கொள்ள வேண்டும்: கணவர் இருக்க வேண்டிய முறைப்படி இருப்பதற்கு உதவும் வகையில் மனைவியின் கீழ்ப்படிதலானது மனப்பூர்வமான கீழ்ப்படிதலாக உள்ளது. கணவர் தம் மனைவியின்மீது கொண்டுள்ள தலைமைத்துவமானது, எப்போதும் அவளது மகிழ்ச்சியை நாடுதலினால் வளமூட்டப்படுகிறது. J. W. ஷெப்பர்டு என்பவர், எபேசியர் 5ன் பிற்பகுதி பற்றிப் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்: "கணவரிடத்தில் உள்ளதென்று அறியப்பட்ட விருப்பம் மனைவிக்கு ஒரு சட்டமாக இருக்க வேண்டும் மற்றும், மனைவியிடம் உள்ளதென்று அறியப்பட்ட விருப்பம் கணவர் அங்கீகரிக்கும் சட்டமாக இருக்க வேண்டும் என்ற வகையிலான பரஸ்பர அன்பும் நம்பிக்கையும் இருக்க வேண்டும்."[1]

## பயபக்தி (5:21)

இல்லத்தில் உள்ள உறவுமுறைகள் அவைகள் இருக்க வேண்டியபடி இருக்க வேண்டுமென்றால், அவைகள் கிறிஸ்தவ உறவுமுறைகளாக இருக்க வேண்டும்; இது முதலாவதும் முந்தினதுமாக உள்ளது. நாம், "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க" வேண்டும் என்று 21ம் வசனம் கட்டளையிடுகிறது. "பயம்" என்பது தெய்வபயத்தைக் குறிக்கிறது, இது ஆழமான வகையிலான மரியாதை அல்லது பயபக்தியைக் குறிக்கிறது.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் கர்த்தருக்கு மரியாதை தராதவரையில், அந்தக் குடும்பமானது இருக்க வேண்டியபிரகாரம் இருப்பதில்லை. இதை நடைமுறைசார் சொற்றொடர்களில் இடுவதென்றால் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் கிறிஸ்தவராக - ஒரு உண்மையான கிறிஸ்தவராக, ஒரு விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவராக, ஒரு அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவராக - இருக்க வேண்டும் என்று இது அர்த்தப்படுகிறது. கணவரும் மனைவியும், தாங்கள் நித்திய ஜீவனாகிய கிருபைக்கு உடன் சுதந்திரர்கள் என்று உண்மை நிறைந்த வகையில் கூறக்கூடும்போது, அது எவ்வளவு அழகானதாக உள்ளது! (1 பேதுரு 3:7ஐக் காணவும்.)


திருமணம், இல்லம் மற்றும் குடும்பம் என்பவை யாவும், தேவனுடைய திட்டத்தின் அங்கமாக உள்ளன - மற்றும் அந்தத் திட்டம் எவ்வாறு

செயல்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தேவன் நமக்குக் கூறுகின்றார். சார்லஸ் ஸ்பர்ஜன் என்பவர் பின்வருமாறு எழுதினார்: "குடும்பமானது தேவனுடைய வசனத்தின்படி ஆளப்படும்போது, தூதர்கள் நம்முடன் தங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்கள், மற்றும் அவர்கள் தங்களின் கூறில் இருந்து தாங்கள் வெளியே இருப்பவர்களாகக் கண்டறியார்கள்." ஒரு குடும்பமானது தேவனுடைய வசனத்தின்படி ஆளுகை செய்யப்படாத போது என்னவாகிறது? கவிஞரான வில்லியம் கௌப்பர், இல்லத்தை "வீழ்ச்சியில் தப்பிப்பிழைத்துள்ள பரதீசின் ஒரே ஆசீர்வாதம்" என்று அழைத்தார். துரதிர்ஷ்டவசமாக, இன்றைய நாட்களில் சில குடும்பங்கள், பரலோகத்தின் முன்சுவையாக இருப்பதற்கு பதில் நரகத்தின் வெளிவாயில் களாக உள்ளன.

நாம் கூறியுள்ளபடி, குடும்பத்தின் உறவுமுறைகள், அவைகள் இருக்க வேண்டியபடி இருப்பதற்கு, அவைகள் கிறிஸ்தவ உறவுமுறைகளாக இருக்க வேண்டும். பல குடும்பங்களில், குடும்பத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கிறிஸ்தவராக இல்லாதிருப்பதால், புத்திமதிகளின் மூன்று துணுக்குகளைத் தருவதற்கு என்னை அனுமதியுங்கள்: (1) சிலர் கிறிஸ்தவராக இராதிருக்கும் ஒரு இல்லத்தில் நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இருந்தால், கிறிஸ்தவர் போலச் செயல்படுங்கள் - இது மற்றவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றனர் என்பதற்காக அல்ல (ஏனெனில் அவர்கள் அவ்வாறு இருப்பதில்லை), ஆனால் நீங்கள் அவ்வாறு இருப்பதற்காகவே செய்யப்பட வேண்டியதாக உள்ளது. (2) நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இராதிருந்தால், கிறிஸ்தவராவதற்கு இன்னும் ஒருநாள் காத்திருக்காதீர்கள். (3) நீங்கள் இன்னும் திருமணம் செய்துகொள்ளாதிருந்தால், ஒரு கிறிஸ்தவரைத் திருமணம் செய்துகொள்ளத் தீர்மானியுங்கள்.

## பொறுப்பு (5:22-24; 6:1-4)

கிறிஸ்தவ குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் தேவனால் தரப்பட்ட குறிப்பிட்ட பொறுப்புக்களை நமது வேதபாடப்பகுதி வரைகுறிப்பிடுகிறது. இந்த பொறுப்புக்களில் சிலவற்றைப் பற்றி நாம், பின்வரும் பாடங்களில் அதிகமாய்ப் பேசுவோம்; இப்போதைக்கு ஒரு சுருக்கமான தொகுப்புரையைக் கொடுப்பதற்கு என்னை அனுமதியுங்கள். கீழே உள்ள எளிய வரைபடத்தில், மேலே உள்ள "கி" என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது, "க" என்பது கணவனை குறிக்கிறது, "ம" என்பது மனைவியைக் குறிக்கிறது மற்றும் கீழே உள்ள "பி" என்பது பிள்ளைகளைக் குறிக்கிறது.




"கிறிஸ்து சபைக்குத் தலையாக இருக்கிறார்" என்பதையும் சபையானது அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது என்பதையும் எபேசியர் 5:23, 24 வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்" அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது (மத்தேயு 28:18).

இல்லத்தில் கணவரும், மனைவியும் மற்றும் பிள்ளைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.

கணவர் தம் மனைவிக்குத் தலைமை வகிக்கின்றார் என்பதும் இதே அளவுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது: "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" (5:23, 24). இந்த வரைபடத்தில் மனைவியானவள் கிறிஸ்துவுக்கும் தனது கணவருக்கும் கீழ்ப்பட்டிருப்பவளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றாள்.

பிள்ளைகள், குடும்பத்தில் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் இவ்வசனப்பகுதி அறிவிக்கிறது: "பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இதுநியாயம்" (6:1). இவ்விதமாக, மேலேயுள்ள வரைபடத்தில், அவர்கள் கிறிஸ்துவுக்கும், அவர்களின் தகப்பனுக்கும், அவர்களின் தாய்க்கும் கீழ்ப்பட்டிருப்பவர் களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

குடும்பமானது தேவன் விரும்புகின்றபடி இருப்பதற்கு, குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தத்தமக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாய் இருக்க வேண்டும். குடும்பத்தைப் பற்றிய ஒரு முக்கியமான உண்மையைப் பின்வரும் நகைச்சுவை வசனக்கவிதை விளக்கப்படுத்துகிறது:

> சேவல் அமைதி காக்கின்ற அல்லது பெட்டைக்கோழி கூவுகின்ற
> துரதிர்ஷ்டவசமான குடும்பத்தில் வருத்தம் செழித்து வளருகிறது;
> கீழ்ப்படிதல் உள்ள கணவர்களா அல்லது ஆதிக்கம் செலுத்தும்
> மனைவிகளா யாருடைய வாழ்வு மிகவும் இயல்புக்கு மாறானது
> என்று நான் அறிவதில்லை.

இந்த வசனங்களை இன்றைய நாட்களிக்குரியதாக மேம்படுத்துவ தென்றால், பிள்ளைகளால் நடத்தப்படும் குடும்பங்களைப்பற்றிய வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளையும், நாம் இதில் சேர்த்துக்கொள்ள முடியும்.

"பொறுப்பு" என்பது குடும்பத்தின் தலைவருக்கான திறவுகோல் வார்த்தையாக உள்ளது. தலைமைத்துவம் என்பது சிறப்புரிமையல்ல, ஆனால் ஒரு பொறுப்பு என்பதாக உள்ளது. ஒரு ஆண், தனது இல்லத்தின் சரீர மற்றும் ஆவிக்குரிய விஷயங்களில் வழிநடத்திச் செல்லுதல் என்பது ஆணுக்குத் தவிர்க்க இயலாத பொறுப்பாக உள்ளது (6:4ஐக் காணவும்).

நமது வேதவசனப்பகுதியில் முன் அமைத்து வைக்கப்பட்டுள்ள பொறுப்புகள், தாழ்நிலை அல்லது உயர்நிலை என்பது பற்றி எதுவும் செய்வதற்கில்லை.[2] வேதாகமமானது பெண்ணைத் தாழ்ந்தவளாக ஒருபோதும் சித்தரிப்பதில்லை. நீதிமொழிகள் 31ல் "குணசாலியான பெண்ணை" கண்ணோக்குங்கள். அவள் மிகவும் திறம்வாய்ந்த பெண்ணாக இருந்தாள்! சராசரி வணிக நிர்வாகிக்கு அவளால், ஒருங்கமைத்தல்,

*தொழில், திறமை மற்றும் மனித உறவுகள் பற்றிப் போதிக்க முடிந்தது!*

*குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவரும் தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும்போது, குடும்பமானது அதிசயிக்கத்தக்க வகையில் செயல்படுகிறது. இது இல்லத்தில் உள்ள எல்லாப்பிரச்சனைகளையும் தானாகத் தீர்த்துவிடுவதில்லை, ஆனால் குடும்பமானது அந்த முடிவைச் சாதிப்பதற்கு முன்னோக்கி விரைந்து செல் வதாயிருக்கும்.*

*எவ்விதமாறுபாடுமின்றி, கேள்விகள் எழும்புகின்றன: ''ஆனால், இல்லத்தில் சிலர் தங்களுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாயிருந்து, மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மனவிருப்பம் இல்லாதிருக்கும்போது என்னவாகும்?"; "அவர் (அவள்) தனது பணிப்பொறுப்பை நிறைவேற்றாது இருக்கும்போது நான் எப்படி என் பணிப்பொறுப்பை நிறைவேற்ற முடியும்?" அந்தக் கேள்விகளுக்குப் பவுல் பதில் அளித்தார். 5:22ல் வலியுறுத்தப்பட்டுள்ள தூண்டுதலை கவனியுங்கள்: ''மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.'' இதே வலியுறுத்தமானது 6:1ல் பிள்ளைகள் தங்கள் பெற்றோருடன் கொண்டுள்ள உறவு முறைகள் பற்றியும் காணப்படுகிறது: "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.'' இதனுடன் தொடர்புடைய வசனப் பகுதியாகிய கொலோசெயர் 3:24 இந்தச் சிந்தனையை விரிவாக்குகிறது: "எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக் கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.''*

*சபையின்மீது கிறிஸ்துவின் அன்பைப் பற்றிப் பேசுவதன்மூலம் பவுல், குடும்பத்தைப் பற்றிய ஒரு எழில்மிகுந்த விவரிப்பைக் கொடுத்தார். சபையானது தான் இருக்க வேண்டிய பிரகாரம் முற்றிலும் இருக்கிறதா? இல்லை. எனவே கிறிஸ்து, ''சபையானது எப்போதும் எனக்குக் கீழ்ப்படிந்திருப்பதில்லை - உண்மையில், சிலவேளைகளில் அது எனக்கு உண்மையற்றுகூட உள்ளது - இனியும் நான் அன்பான தலைமைத்துவத்தை அதற்கு அளிக்கமாட்டேன்'' என்று கூறுகின்றாரா? அவர், "நான் இனி சபையின்மீது அன்புகூரமாட்டேன், இனியும் நான் சபையை ஆசீர்வதிக்க என்னால் முடிந்த யாவற்றையும் செய்யமாட்டேன்" என்று கூறுகின்றாரா? இல்லையே.*

*உங்கள் இல்லத்தில் உள்ள யாவரும் தங்கள் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளாதவரையில் உங்கள் இல்லமானது, அது இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பது என்பது ஒருக்காலும் முடியாது. விஷயம் அதுவாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நீங்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ அவ்வாறே இருக்க நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.*

## *அன்பு (5:25, 28, 29, 33)*

*வசனம் 25ஐயும் அதைத் தொடர்ந்து வரும் வசனங்களையும் மதிப்பதற்கு நாம், பவுலின் நாளில் இருந்த உலகம் பற்றிய சில*

*விஷயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். யூதத்துவ உலகில், மனைவிகள், திருமணம் மற்றும் இல்லம் ஆகியன, கோட்பாட்டளவில் உயர்ந்த மதிப்பளிக்கப்பட்டிருந்தன; ஆனால் நடைமுறையில், விஷயம் இதுவாக இருக்கவில்லை. ஒரு யூதர் தமது காலை ஜெபத்தை ஜெபிக்கும்போது, தம்மை தேவன், "ஒரு புறஜாதியானாகவோ, ஒரு அடிமையாகவோ அல்லது ஒரு பெண்ணாகவோ" படைத்திராமல் இருந்ததற்காக நன்றி செலுத்தினார்.[3] யூதர்கள் மத்தியில் விவாகமுறிவு என்பது இகழ்ச்சிக்குரிய வகையில் மிகவும் சுலபமானதாக இருந்தது; மிகவும் அற்பமான காரணங்களுக்காகக்கூட, மனைவிகள் தள்ளிவைக்கப்பட்டிருந்தனர்.*

*கிரேக்க உலகம் இதைவிட மிகவும் மோசமானதாக இருந்தது. விபசாரம் என்பது கிரேக்க வாழ்வின் ஒருங்கிணைந்த பாகமாக இருந்தது. டெமாஸ்தெனிஸ் என்பவர், "நாங்கள் சந்தோஷத்தினிமித்தம் விலைமகளிரைக் கொண்டிருக்கின்றோம்; நாங்கள் அன்றாடம் உறவு கொள்வதற்கு ஆசைநாயகிகளைக் கொண்டுள்ளோம்; நாங்கள் சட்டப் பூர்வமான பிள்ளைகளைப் பெறுவதற்கும், எங்களது வீட்டு விஷயங்கள் யாவற்றிற்கும் உண்மையான காப்பாளராய் இருப்பதற்கும் மனைவிகளைக் கொண்டுள்ளோம்" என்று எழுதினார்.[4]*

*ரோம உலகம் இதைவிட இன்னும் மிக மோசமானதாக இருந்தது. பவுலின் காலத்தில், ரோமக்குடும்ப வாழ்வு சிதைவுற்றுக் காணப்பட்டது. ஐந்து ஆண்டுகளில் எட்டு கணவர்களைக் கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பற்றி ரோம எழுத்தாளர் ஒருவர் கூறினார். இருபத்து மூன்றாவது கணவருக்கு திருமணம் செய்விக்கப்பட்டிருந்த - அந்த மனிதருக்கு அவள் இருபத்தியோராவது மனைவியாய் இருந்தாள் - ஒரு பெண்ணைப் பற்றித் தொடக்ககாலக் கிறிஸ்தவ வரலாற்றாளர் கூறினார்.*

*அந்த நாட்களில், பெண்ணும் பிள்ளைகளும் அடிப்படையில் எந்த உரிமையும் இல்லாதிருந்தனர். அவர்களின் வாழ்க்கை பற்றிய முடிவுகள் யாவையும் அந்த வீட்டில் இருந்த ஆணால் மேற்கொள்ளப்பட்டது.*

*இந்தப் பின்னணிக்கு எதிராகப் பவுல், "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" என்று எழுதினார் (வசனங்கள் 25, 27இ). பவுலின் நாட்களில் திகைப்புற்ற வாசகர் ஒருவர், "கணவரும் தமது மனைவியினிடத்தில் சில பொறுப்புகளைக் கொண்டுள்ளார் என்று நீங்கள் அர்த்தப்படுத்துகின்றீர்களா?" என்று கேட்பதை என்னால் கற்பனைசெய்ய முடிகிறது. "அதுவே சரியானது, அந்தப் பொறுப்புகளில், அவர் தமது மனைவியில் அன்புகூருதல் என்பது முதலாவதாக உள்ளது" என்று பவுல் கூறியிருப்பார். அந்தச் சத்தியத்தை நாம் காணாது விடுவதைப் பவுல் விரும்பவில்லை, எனவே அதை அவர் நமது வேதபாடப்பகுதியில் மூன்று முறை கூறினார்:*

> *புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (வசனங்கள் 25, 27இ).*

*அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும் (வசனம் 28அ).*

*எப்படியும், உங்களில் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன் (வசனம் 33அ).*

ஒரு கணவர் தம் மனைவியை எவ்வாறு அன்புகூர வேண்டும்? "கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்ததுபோல" அன்புகூர வேண்டும். கிறிஸ்து சபையின்மீது கொண்டிருந்த (மற்றும் கொண்டுள்ள) அன்பு எத்தகையது? பழிப்பிற்குரிய, பழிவாங்கும் தன்மையுள்ள, சுயநலமான "அன்பா"? (அல்லது) "தான் ஒரு 'முதலாளியாக' இருப்பதை நிரூபிக்கும் வகையில் சட்டங்களை இடுவதில் மகிழ்வடைகிற அன்பா?" இல்லை! அவரது அன்பு சுயநலமற்ற அன்பாக உள்ளது, அந்த மாபெரும் அன்பினிமித்தம், அவர் சபைக்காகத் "தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்."

28 மற்றும் 29ம் வசனங்கள், "அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனு மில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக்காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்" என்று கூடுதலாகக் கூறுகிறது. உண்மையில் இயேசு, தமது சொந்த சரீரத்தைக் காட்டிலும் அதிகமாக சபையின்மீது அன்புகூர்ந்தார் - ஏனெனில் அவர் சபையைக் கிரயம் கொள்வதற்காகத் தமது சரீரத்தைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்!

தொடக்ககால எழுத்தாளரான கிறிஸோஸ்தோம் என்பவர், நாம் படித்துக்கொண்டிருக்கும் இவ்வசனங்களுக்குப் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

*கீழ்ப்படிதலின் அளவீட்டை நீங்கள் கண்டிருக்கின்றீர்களா? இங்கு அன்பின் அளவீட்டையும் கேளுங்கள். உங்கள் மனைவிகள், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல் உங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா? அப்படியானால் கிறிஸ்து சபையின்மீது செலுத்துவதுபோன்ற அக்கறையை நீங்கள் உங்கள் மனைவிகளின்மீது செலுத்துங்கள். தேவைப்பட்டால் நீங்கள் உங்கள் மனைவிக்காக உங்கள் உயிரையும் கொடுக்கவேண்டும் அல்லது ஆயிரம் துண்டுகளாக வெட்டப்படுவதற்கும் சம்மதிக்கவேண்டும் அல்லது என்ன நேர்ந்தாலும் சகித்துக்கொள்ள வேண்டும், அதை மறுக்காதீர்கள் … அவர் பயமுறுத்துதலினாலோ அல்லது பயத்தினாலோ அல்லது அவ்விதமான வேறு எந்தச் செயலினாலோ அல்ல, ஆனால் தமது மாபெரும் போஷிப்பினாலேயே சபையைத் தமது பாதங்களின்கீழ்க் கொண்டு வந்தார், அதுபோன்றே நீங்களும் உங்கள் மனைவியிடத்தில் நடந்துகொள்ளுங்கள்.*[5]

இவ்வாறு அன்பு செய்யும் கணவர்களுக்குக் கீழ்ப்படிவதில் சில மனைவி களே இடர்ப்பாட்டைக் கொண்டிருப்பார்கள்!

இவ்வகையான அன்பு குடும்பத்தின் எல்லா உறவுமுறைகளிலும் பண்பாய் இருக்க வேண்டும் என்பது உண்மையே: மனைவிகள் தங்கள் கணவர்களில் அன்புகூர வேண்டும்; பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புகூரவேண்டும்; பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடத்தில் அன்புகூர வேண்டும். பவுல் தீத்துவினிடத்தில் இளம் பெண்கள் "தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களாய்'' இருக்கும்படி போதிக்கப்பட வேண்டும் என்று கூறினார் (தீத்து 2:4). அன்பு என்பது இல்லத்தின் இருதயம் போன்றுள்ளது.

## பரிசுத்தத்தன்மை (5:25-27)

25 முதல் 27வரையுள்ள வசனங்கள், கிறிஸ்து தமது ஆவிக்குரிய மணவாட்டியினிடம் கொண்டுள்ள அன்புள்ள உறவுமுறை மூலம் சாதிக்க முயற்சி செய்யும் ஒரு இலக்கைப் பற்றி நமக்குக் கூறுகிறது:

> ... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

''கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்'' என்ற வார்த்தைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து பார்க்கவும். இயேசு தாமே சபைக்குப் பரிசுத்தமானவராக, தூய்மையானவராக, மற்றும் உண்மை யுள்ளவராக இருக்கின்றார். அவர் தம்மிடத்தில் உண்மையுள்ள ஒரு தூய்மையான மற்றும் பரிசுத்தமான மணவாட்டியை விரும்புகின்றார்.

இன்றைய நாட்களில் "நம்பிக்கைத் துரோகம் என்பது உண்மையில் திருமண வாழ்விற்கு எந்தக் கெடுதலும் செய்வதில்லை; உண்மையில், சிலருடைய வாழ்வில் இது மேம்பாட்டை ஏற்படுத்தக்கூடும்" என்பது போன்ற செய்திகள் நமது செவிகளைத் தாக்குகின்றன. அது பிசாசானவனு டைய பொய்யாக உள்ளது. ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவருக்காக வாழ்நாள் முழுவதும் ஒப்புக்கொடுத்துள்ள நிலையில்தான் திருமண உறவுமுறையானது வளர்ந்து பக்குவமடைய முடியும் - இந்த உறவில், திருமணத்தில் இணைந்த கணவன் மனைவி ஆகிய இருவரும் வேறெவருக்கும் தங்களைக் கொடுத்திருக்கமாட்டார்கள், விஷயம் இவ்வாறு உள்ளது என்பதை அவ்விருவருமே எவ்வித சந்தேகமும் இன்றி அறிகின்றனர்.

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியர், ''விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்''

(எபிரெயர் 13:4) என்று கூறியபோது மிகத்தெளிவாகவே பேசினார்.

## வளர்ச்சி (5:26, 27)

நாம், 26 மற்றும் 27ம் வசனங்களின் மறைவான கருத்துக்களை இன்னும் சற்றுத்தூரம் எடுத்துச்செல்வோம்: கிறிஸ்து நம்மைப் பரிசுத்தமானவர்களாகவும் தூய்மையானவர்களாகவும் ஆக்குவதற்காக நம்மீது அன்புகூருகின்றார், ஆனால் நம்மிடத்தில் இன்னும் அந்தப் பண்புகள் இருப்பதில்லை. எனவே நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதற்காகவே இயேசு நம்மீது அன்புகூருகின்றார் என்று கூறமுடியும். இருக்க வேண்டிய பிரகாரம் ஆகுதலுக்குக் காலம் செல்லும்; இதற்கு வளர்ச்சி தேவைப்படுகிறது.

இந்தக் கொள்கையானது திருமணத்திலும் இல்லத்திலும் என்ன செய்வதாக உள்ளது? நம்மில் பலர் திருமணம் செய்துவிட்டு பின்பு திருமணத்தை நமது "செய்ய வேண்டிய கடமைகளின்" பட்டியலில் (செய்து முடித்துவிட்டதாக) குறியிடுகின்றோம். இணைவுச் செயல்முறையினூடே நாம் கடந்து செல்லுகின்றோம்; சற்றே நமது காலத்தையும் பணத்தையும் சிற்றின்பத்திற்காகவும் ஒரு துணையை ஆதாயப்படுத்துவதற்காகவும் செலவிடுகின்றோம்; இப்போது நாம், நமது திருமணத்தை மறந்துவிட முடியும் என்றும் வாழ்வில் வெற்றிபெற முன்னேறிச் செல்வதில் கவனம் செலுத்த முடியும் என்றும் நினைக்கின்றோம். நாம், ஒன்று, இரண்டு, மூன்று அல்லது அதிகமான பிள்ளைகளைக் கொண்டிருக்கலாம், பின்பு நாம், அவர்களை வேதாகமப் பள்ளிக்கும் ஆராதனைக்கும் அழைத்துச் செல்லும் வரையில், அவர்கள் மீதான நமது பொறுப்புகளை நிறைவேற்றியிருப்பதாகக் கற்பனை செய்துகொண்டிருக்கலாம்.

உறவுமுறைகள் வளரவேண்டும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உறவுமுறையை மேம்படுத்துதலுக்குக் காலம் தேவைப்படுகிறது. இல்லம் என்பது இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதற்கு முயற்சி தேவைப்படுகிறது. குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், அதில் எழும் பிரச்சினை எதையும் தேவனுடைய உதவியுடன் எதிர்கொண்டு, அந்தப் பிரச்சனைகளைக் கையாளவேண்டும்.

## நிரந்தரத் தன்மை (5:31; 6:3)

31ம் வசனம் நன்கு பழக்கமான வசனமாக உள்ளது, இது தொடக்கத்தில் ஆதியாகமம் 2:24ல் காணப்படுகிறது, மற்றும் மத்தேயு 19:5ல் இயேசுவினால் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது: "இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்." (மாற்கு 10:7, 8ஐயும் காணவும்.) அந்த மேற்கோளில் பல மாபெரும் சத்தியங்கள் விளக்கப்பட்டுள்ளன, ஆனால் அவற்றில் ஒன்றை மாத்திரம் நாம் இவ்விடத்தில் வலியுறுத்துவோம்: திருமணத்தின் நிரந்தரத்தன்மை.

எந்த ஒரு உறவுமுறையிலும் பிரச்சனை என்பது தவிர்க்க

இயலாததாக உள்ளது, ஆனால் அது, கணவர் என்ற வகையில் நீங்கள் அவளைத் தள்ளிவைப்பதன்மூலம் உங்கள் "இளம் வயதின் மனைவிக்குத் துரோகம்" செய்ய வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை (மல்கியா 2:14). அதுபோன்றே, உங்கள் மனைவியரும் உங்களிடத்தில் அவ்வாறு நடந்துகொள்ளக்கூடாது. தேவன் இன்னமும் தள்ளிவிடுதலை வெறுக்கின்றார் (மல்கியா 2:16). இயேசு, "ஆகையால், தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்று அறிவித்தார் (மத்தேயு 19:6ஆ).

பெரும்பாலான பிள்ளைகள் கடைசியில் இல்லத்தை விட்டு வெளியேறுகின்றனர் (மத்தேயு 19:5), ஆனால் அவர்களின் பெற்றோர் களுடைய திருமண வாழ்வு சீர்பொருந்தியதாக இருக்கும்போது, அவர்கள் எப்போதுமே வேர்களைக் கொண்டுள்ளனர். அவர்கள் "இல்லத்திற்கு வருவதற்கென்று" ஒரு இடத்தை எப்போதுமே கொண்டுள்ளனர். இவ்வித மாக, எபேசியர் 6:3ன் சத்தியமானது அவர்களுக்கு ஒரு அர்த்தம் தருகிறது; அன்பான ஒரு வீட்டிற்கு அவர்கள் திரும்பும்போது, அவர்கள் தங்களைப் பொறுத்தவரை எல்லாம் "நலமாக" உள்ளது என்று அறிவார்களே.

## மதிப்பு (5:21, 28, 33; 6:2, 4)

நாம் படித்துக் கொண்டிருக்கும் வசனப்பகுதியானது மதிப்பு என்ற கருத்துடன் தொடங்குகிறது ("தெய்வபயத்துடனே"), மற்றும் இது மதிப்புச் செலுத்தும்படியான ஒரு கட்டளையுடன் முடிகிறது ("மனைவியும் தன் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்"). 5:21ல் உள்ள "பயம்" என்ற வார்த்தையானது ஒரு பெயர்ச்சொல்லாக உள்ளது, 5:33ல் உள்ள "பயபக்தி" என்ற வார்த்தையானது ஒரு வினைச்சொல்லாக உள்ளது; ஆனால் இவ்விரு வார்த்தைகளுமே கிரேக்க மொழியில், "ஆழமான மற்றும் இருதயத்தில் உணரப்பட்ட மதிப்பு" என்று அர்த்தப்படுகிற ஒரே வேர்வார்த்தையில் இருந்து வருகின்றன.[6]

எபேசியர் 5:21-6:4ல், மதிப்பு என்பது விசேஷித்த வகையில் மூன்று உறவுமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது: யாவரும் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்க வேண்டும் (5:21), மனைவிகள் தங்கள் கணவர்கள்மீது மதிப்புடையவர்களாய் இருக்கவேண்டும் (5:33), மற்றும் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைக் கனப்படுத்த வேண்டும் (6:2). மதிப்பு என்பது இல்லத்தில் உள்ள எல்லா உறவுகளிலும் அத்தியாவசியமானதாக உள்ளது. கணவர், "தன்னில்தானே அன்புகூருவதுபோல் தமது சொந்த மனைவியிடத்தில் அன்புகூர வேண்டும்" (5:33), இது மனைவியின்மீது மதிப்புச் செலுத்துதலை மறைமுகமாய் உணர்த்துகிறது. தந்தையர்களுக்கு, "உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தவேண்டாம்" என்று கூறப்பட்டுள்ளது (6:4அ), இது பிள்ளைகள்மீது மதிப்புச் செலுத்துதலை மறைமுகமாய் உணர்த்துகிறது.

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் நமது இல்லங்களில் உள்ள மற்ற வர்களின்மீது மதிப்புச் செலுத்துவதற்குக் காரணம் ஒவ்வொன்றையும் கொண்டுள்ளோம்: சகமனிதர்கள் என்ற வகையில் நாம் ஒருவர் மற்ற

வர்மீது மதிப்புச் செலுத்தவேண்டும். ஒரே குடும்பத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் ஒருவர் மற்றவர்மீது மதிப்புச் செலுத்த வேண்டும். குடும்பத்தில் எல்லாரும் கிறிஸ்தவர்களாய் இருந்தால் நாம் ஒருவர் மற்ற வர்மீது கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகள் என்ற வகையில் மதிப்புச் செலுத்தவேண்டும். எனது கடைசி மகளான ஆஞ்சி தனது ஒன்பது வயதிலேயே கிறிஸ்தவளானாள், ஞானஸ்நானத்தண்ணீரில் இருந்து அவள் வெளியே வருகையில், நான் அவளது நனைந்த, நடுங்கும் உடலின்மீது எனது கைகளைக்கொண்டு அரவணைத்தேன், அவளும் நானும் இப்போது ஒரு புதிய உறவுமுறையைக் கொண்டிருந்தோம். ரோப்பர் குடும்பத்தில் நாங்கள் தந்தை/மகள் என்ற உறவைக் கொண்டிருந்தது மட்டுமின்றி, கர்த்தருடைய குடும்பத்தில் நாங்கள் ஒரு சகோதரன்/சகோதரி என்ற உறவையும் கொண்டிருந்தோம்.

பரஸ்பரம் மதிப்பைக் காண்பிக்கும் குடும்பம் ஒன்றில் அங்கம் வகித்தல் என்பது மேன்மையானதாக உள்ளது. கணவர்கள் தங்கள் மனைவியரைத் தாழ்த்திப் பேசுவதில்லை; மனைவியர் தங்கள் கணவர்களின் திறமை யற்றதன்மை பற்றிச் சிரிப்பதில்லை; பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை முட்டாள்களாக பாவித்துச் செயல்படுவதில்லை, மற்றும் பிள்ளைகள் தங்கள்மீது அன்புகூரும் பெற்றோர்களிடத்தில் சாந்தமாகவும் மதிப்புச் செலுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர்.

## முடிவுரை

தேவன் விரும்புகின்ற வகையிலான இல்லம் என்பது எது? அது சுயநலமின்மை, பயபக்தி, பொறுப்பு, அன்பு, பரிசுத்தத் தன்மை, வளர்ச்சி, நிரந்தரத் தன்மை மற்றும் மதிப்பு ஆகியவை உள்ள இடமாகும். நாம் அப்படிப்பட்ட இல்லங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்றால், நம்மில் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும்; நம்மில் ஒவ்வொருவரும் நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்க வேண்டும்.

நான் ஒருமுறை இதைப்போன்ற தலைப்பில் பேசியபோது, பிரசங்கம் முடிந்தபின்பு ஒரு பெண்மணி என்னிடத்தில் வந்து, "இன்றைய நாளின் பிரசங்கத்தை யாரேனும் ஒலிப்பதிவு செய்தார்களா? அதன் பிரதி ஒன்றை நான் என் கணவருக்காகப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்! அதைக் கவனித்துக் கேட்கும்படி நான் என் கணவரை வற்புறுத்தப்போகின்றேன்!" என்று கூறினார்கள். இந்தப் பாடம் உங்கள் துணைவருக்கோ/ துணைவிக்கோ அல்லது உங்கள் பிள்ளைகளுக்கோ நல்லதாக இருக்கலாம் அல்லது அவ்வாறு இராமற்போகலாம், ஆனால் இது உங்களுக்கு உதவக்கூடும். உங்களை நீங்களே, "எனது இல்லத்தை மேன்மையாக்க என்னால் என்ன செய்ய முடியும்? எனது குடும்பத்தில் உறவுமுறைகளை நான் எவ்வாறு மேம்படுத்த முடியும்?" என்று கேட்டுக்கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இராதிருந்தால், தேவனுடைய பிள்ளையாகுதல் என்பதே நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முதல் படியாக உள்ளது (மாற்கு 16:16; நடபடிகள் 2:38). நீங்கள் கிறிஸ்தவ வாழ்வில் உண்மையற்றுப்போயிருந்தால், கர்த்தரிடத்திலும் அவரது

*சபையினிடத்திலும் திரும்புதல் என்பதே நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முதல் படியாக உள்ளது (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16). நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிவது அவசியம் என்றால், இதுவே அதற்கான வேளையாக உள்ளது.*[7]

---

குறிப்புகள்

[1]David Lipscomb, "Ephesians, Philippians, and Colossians," in *A Commentary on the New Testament Epistles*, ed. J. W. Shepherd (Nashville: Gospel Advocate Co., 1960), 4:117. [2]*வேகமாய் சென்றதற்காகக் காவலர் என்னை நிறுத்த வேண்டியிருந்தால், அவர் எனக்கு மேலானவராயிருக்க மாட்டார், நான் அவருக்குக் கீழானவராய் இருக்கமாட்டேன்; ஆனால் அந்தச் சூழ்நிலையில், அவர் என்மீது அதிகாரம் கொண்டிருப்பார் (ரோமர் 13:1). வேதாகம அதிகாரத்துவம் என்பது மேலானநிலை அல்லது கீழானநிலை என்பது பற்றி எதுவும் செய்வதற்கில்லை. ஒவ்வொரு விஷயமும் தேவனுடைய ஏற்பாடுகளின்படி செய்யப்பட வேண்டியதாக உள்ளது.* [3]Quoted in William Barclay, *The Letters to the Galatians and Ephesians*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 168-71. [4]Ibid. [5]Ibid., 173. [6]The KJV has "reverence" in 5:33. [7]*திருமணம் மற்றும் குடும்பம் பற்றி நான் பிரசங்கிக்கும்போது, இதுவே நான் விடுக்கும் அடிப்படை அழைப்பாக உள்ளது. குடும்பம் பற்றி நான் பேசும்போதெல்லாம், அது ஒரு கிறிஸ்தவ குடும்பமாக இருக்க வேண்டும், அதாவது குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் உண்மையுள்ள கிறிஸ்தவராய் இருக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துவது உண்டு. பின்பு ஒவ்வொருவருக்கும், கிறிஸ்தவராவது எப்படி அல்லது மீளக்கட்டுவிக்கப்படுதல் எப்படி என்று நான் கூறி - அதற்கு அவர்கள் பதில்செயல் செய்யும்படி வேண்டுவதுண்டு.*